**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற பெற வேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 1,843,950 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வறுமையை ஒழிக்கும் | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்குரிய தொகையை மீளளிப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்காக முகவர் உத்தியோகத்தர் ஒருவர் வருகை தந்து | அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செயற்திட்டத்திற்காக நிறுவனம் நடாத்திச் சென்ற பாடநெறிக்காக ரூபா 3,577,394 தொகை தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த அளவு அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்படாதிருந்ததுடன் இந்த பெறவேண்டிய மீதியை அறவிடுதல் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | அதன் செயற்பாடு நிலை தொடர்பாக பரீட்சித்து வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அந்த செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயத்தை சேர்த்தல், அகற்றுதல், மீள்மதிப்பீட்டு பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றை காண்பிக்கும் வகையில் முறையாக நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் சேர்த்தல்கள், அகற்றுதல்கள், மீள்மதிப்பீட்டு பெறுமதி மற்றும் பெறுமானத்தேய்வை காண்பிக்கின்ற வகையில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. | முறையான நிலையான சொத்துப் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் 1995 யூலை 28 ஆந் திகதிய 882 | இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக இயந்திர பொறிமுறைகளை உள்ளடக்கிய நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டியிருந்த | கைத்தொழிலுக்காக இயந்திர பொறிமுறைகளை உருவாக்குவதற்குத் தேவையான பதவியணியினர் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான திறைசேரி நிதியேற்பாடு கிடைப்பதிலுள்ள | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 5(3) ஆம் பிரிவு | போதிலும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | குறைபாட்டின் அடிப்படையில் பேராதனை பல்கலைக்கழகம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தேசிய தொழிற்முயற்சிகள் அதிகாரசபை, அணுசக்தி அதிகாரசபை, Gemmological Institute Of Thailand போன்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

-----------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,105,126 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,339,649 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 18,444,775 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக பாடநெறி வருமானம் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கெவுட வெப்பமேற்றி பட்டை தீட்டல் தொடர்பாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு 16 சேவைகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு சேவை மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | கைத்தொழில்களில் இருந்து கிடைக்கின்ற கோரிக்கையின் பிரகாரம் இந்த கெவுட வெப்பமேற்றும் சேவைகள் வழங்கப்படுவதுடன் அதன் பிரகாரம் கிடைத்த ஒரேயொரு கோரிக்கைக்காக சேவை வழங்கப்பட்டுள்ளது. எனினும் எமது நிறுவனத்தின் மூலம் நடாத்திச் செல்லப்படுகின்ற வெப்பமேற்றி பட்டை தீட்டும் பாடநெறி ஊடாக | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உருவாக்கப்பட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் தங்களால் தமது இரத்தினக்கல் மாதிரிகளை வெபப்மேற்றி பெற்றுக் கொள்வதுடன் அந்த சேவைகளும் கைத்தொழிலுக்கு வழங்கப்படுகின்றது. அதன் காரணமாக விசேட சந்தர்ப்பங்களுக்காக மாத்திரம் எமது நிறுவனத்தின் சேவையை வழங்குவதற்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இரத்தினக்கற்களை வெப்பமேற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 10,977,344 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட மின் அடுப்பு கொள்வனவு செய்யப்பட்டு 06 வருட காலம் விளைவற்று காணப்பட்டதுடன் 2020-2021 காலத்தில் ரூபா 3,953,540 செலவில் இந்த அடுப்பிற்கு மேலதிக உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சார சுற்று என்பவற்றை இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. 2020-2021 காலப்பகுதியில் 14 நாட்களில் 05 ஆராய்ச்சி தடவைகளில் மாத்திரம் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி அடுப்பினை பொது மக்கள் சேவையில் ஈடுபடுத்துவதற்காக நடாத்தப்பட்ட பூர்வாங்க விழாவின் பின்னர் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி முதல் 06 நாட்கள் வரை ஆராய்ச்சி தடவைகளில் இயக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக ஏற்பட்ட நெருக்கடியின் அடிப்படையில் மீண்டும் ஆராய்ச்சி தடவைகள் 2020 திசெம்பர் 08 ஆந் திகதியே மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் பின்னைய நாட்களில் அடுப்பின் கட்டுப்பாட்டு பரப்பில் ஏற்பட்ட வழுக்களின் காரணமாக இந்த ஆராய்ச்சி தடவைகளை கைவிட வேண்டியேற்பட்டிருந்தது. இது தொடர்பாக முகவர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதற்காக தேவையான இலத்திரனியல் துணைப்பாகங்கள் வெளிநாட்டு தாய் நிறுவனத்திலிருந்து பெற்று | நிறுவனத்தால் இதற்காக அதிக செலவினம் செய்யப்பட்டமையால் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் இந்த இயந்திரத்தை பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அதற்காக 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் 2020-2022 காலத்தில் ஏற்பட்ட மேற்கூறப்பட்ட தடைகளுக்கு மத்தியில் 20 நாட்கள் மின்அடுப்பு இயக்கப்பட்டிருந்தது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017-2031 காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 300.65 மில்லியன் தொகையில் மேற்கொள்ளப்படுகின்ற இலங்கையில் இரத்தினக்கல் படிவு ஆய்வு மற்றும் மதிப்பீட்டு செயற்திட்டத்தின் மூலம் மொனராகலை, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை போன்ற மாவட்டங்களில் 50 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இரத்தினக்கல் படிவுகளில் மேற்கொள்ளப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடங்களை விநியோகிக்ப்பதற்கு திட்டமிடப்பட்ட 04 மாவட்டங்களில் அமைந்துள்ள 11 பிரதேச செயலகங்களில் இரத்தினக்கல் படிவு ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு 08 பிரதேச செயலகங்களுக்கு மாத்திரம் இறுதி அறிக்கை மற்றும் வரைபடம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | பதவியணியினர் கிடைக்கும் வரை நிறுவனத்தில் தற்போது இருக்கின்ற பதவியணியினர்களை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக தகுதியான பதவியணியினரின் பிரகாரம் கவனத்தில் கொள்ளும் போது கணக்காய்வில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் செயற்திட்டங்களை அமுல்படுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட செயல் முன்னேற்றமாக இருந்த போதும் இது தற்போது காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட புவிச்சரிதவியல், கனிப்பொருள் விஞ்ஞான பட்டதாரிகளின் எண்ணிக்கையான 03 உத்தியோகத்தர்களினதும், தற்போது சேவையை விட்டுச் சென்றுள்ள மேலும் நான்கு உத்தியோகத்தர்களினதும் பங்களிப்புடன் ஆகும். தற்போது மூன்று உத்தியோகத்தர்கள் | அதிகாரசபையின் செயற்பாடுகளை செயற்திறனாகவும் வினைத்திறனாவும் நிறைவேற்றக் கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாத்திரம் செயற்திட்டத்திற்கு தொடர்ச்சியாக பங்களிக்கின்றனர். பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் இந்த நாட்டில் இரத்தினக்கல் படிவுகளின் பரவல், செறிவு ஆய்வு மற்றும் நடைமுறைரீதியான காரணங்களின் அடிப்படையில் காணப்படுகின்ற குறைந்த பதவியணியினரை உச்ச அளவில் பயன்படுத்தும் வகையில் இந்த செயற்திட்டம் இனங்காணப்பட்டு முன்னுரிமை பட்டியலின் பிரகாரம் பிரதேச செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றோம். | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை இரத்தினக்கல் உள்ள இடங்களாக இனங்காணப்பட்ட 112 காணிகளின் விபரங்கள் இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் இந்த காணிகள் ஏலமிடுவதற்காக அனுப்பப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தால் இரத்தினக்கல் உள்ளமை இனங்காணப்பட்ட காணிகளில் இரத்தினக்கல் மீண்டும் காணப்படுகின்றதா என பரீட்சிப்பதற்கு ஆராய்ச்சி அகழ்வு மேற்கொள்வதற்கு அதிகார சபை தீர்மானம் எடுத்தமை 02 நிறுவனங்களுக்கு இடையே சரியான தொடர்பொன்று இன்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டமையால் தற்போது | தற்போது தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள தவலம பிரதேச செயலகப் பிரிவில் காணி உரிமையாளர்கள் அந்த அதிகார சபையினால் தவலம பிரதேச அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அந்த காணி உரிமையாளர்களுக்கு இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 02 நிறுவனங்களுக் கிடையே சரியான தொடர்புடன் ஆராய்ச்சி விளைவுகளை ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சிகள் ஆக்கபூர்வமானதாக இருக்கவில்லை. | | |
| (இ) | இரத்தினக்கல் உள்ளதாக இனங்காணப்பட்ட காணிகள் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு அனுப்பி அவற்றினை ஏலமிடுவதால் பெறப்படுகின்ற வருமானத்தில் 25 சதவீதம் நிறுவனத்திற்கு பெற்று அந்த தொகையில் ரூபா 174.15 மில்லியன் தொகை 2022-2031 ஆண்டு காலத்திற்கிடையில் செயற்திட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் அந்த தொகையினை பெற்று செயற்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | செயற்திட்டம் ஊடாக இனங்காணப்பட்டுள்ள சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் காணப்படுகின்ற சகல பொருத்தமான இரத்தினக்கல் காணப்படும் இடங்களை அகழ்வதற்காக அனுப்புவதற்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை இணங்கியிருந்தது. அதன் ஊடாக எதிர்பார்த்த வருமானம் இந்த நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையுடன் இணக்கப்பாட்டிற்கு வந்து செயற்திட்டத்தினை எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக அமுல்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கல்வி அமைச்சு மற்றும் நிறுவனத்திற்கிடையே 2019 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் “13 ஆண்டுகள் தொடர்ச்சியாக கல்வி நிகழ்ச்சித்திட்டம்” இன் கீழ் இரத்தினக்கல் வெட்டுதல், பட்டை தீட்டுதல் மற்றும் ஆபரணங்கள் உற்பத்திக்காக நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. 2019-2021 காலத்தில் இரத்தினக்கல் வெட்டுதல், பட்டை தீட்டுதலுக்காக 185 மாணவர்களும், ஆபரண உற்பத்தி பாடநெறிக்காக 227 மாணவர்களும் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதும் | 2019-2021 காலத்தில் நாட்டில் காணப்பட்ட எதிர்பார்த்திராத நிலைமையின் பிரகாரம் அதாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்று நோயின் காரணமாக அதிக காலம் நாட்டை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தமையினால் இந்தக் கால எல்லையின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட அநேகமான பயிற்சி பாடநெறிகள் முறையான பிரகாரம் அந்த எதிர்பார்த்த காலஎல்லையில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன் பாடநெறிக் காலம் சராசரி நிலைமையினை விட நீண்டகாலம் எடுத்திருந்தது. | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக பயிற்சி பாடநெறிகள் முறையான பிரகாரம் திட்டமிட்டு அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இதற்காக நிறுவனத்தின் பயிற்சி பெற்றிருந்தோர் முறையே 96 மற்றும் 151 மாணவர்கள் மாத்திரம் ஆகும். | அதன் பிரகாரம் அமுல்படுத்தப்பட்ட அந்த பாடநெறியை பூர்த்தி செய்யாமல் புதிதாக மாணவர்களை சேர்த்து புதிய பாடங்களை ஆரம்பிப்பதற்கு நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனிதவளங்கள் போதியமட்டத்தில் காணப்படாமையால் பதின்மூன்று ஆண்டுகள் சான்றுப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்த மாணவர்கள் உரிய கால எல்லையில் சேர்ப்பதற்கு முடியாதிருந்தது. | |

## 3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட பகுதி இரத்தினக்கல் நிறம் மற்றும் விளக்கமளிக்கும் வேலைகளை முறையாக இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் 2020 திசெம்பர் 21 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட வேண்டிய Presser Vesser உபகரணம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 999,895 தொகையில் செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அதாவது 2021 ஏப்ரல் 29 ஆந் திகதி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற இந்த செயற்திட்டத்திற்கு உரிய காலஎல்லையில் இந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பலதடவைகள் கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும் தகுதியான Preshure Vesseal உபகரணத்திற்காக கேள்வி கிடைக்காதிருந்த போதும் செயற்திட்ட இறுதி அரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கூறுவிலை கோரலின் போது எதிர்பார்த்த அந்த உபகரணத்திற்காக கூறுவிலை பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உரிய | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்காக குறித்துரைத்த காலத்தில் பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

உபகரணங்கள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் உபகரணங்கள் கிடைப்பதற்கு சில காலம் எடுத்தமையால் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த உபகரணம் தற்போதும் ஏனைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.